விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 மார்கழி 11 ஜ. ஆகிர் பிறை 8 இதழ்: 245

யாழ்ப்பாணம் புதன்கிழமை 26-12-1990


## "முஸ்லிம் கடற்படையினரால் முகாமில் தாக்கப்பட்டோம்"

### விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தகவல்

(வி. பிரான்சிஸ்)

தலைமன்னார் கடலில்வைத்து கைதுசெய்யப்பட்ட எட்டு குருநகர் மீனவர்களும் காரை நகர் கடற்படை முகாமில் வைத்து முஸ்லிம் கடற்படையினரால் சப்பாத்துக் காலால் உதைக்கப்பட்டும மோசமாக தாக்கப்பட்டுமுள்ளனர்.

இத்தகவலை குருநகரைச் சேர்ந்த மீனவர்கள் குணசீலன், தங்கராசா, சின்னத் தம்பி ஆகியோர் தெரிவித்த னர்.

அவர்கள் மேலும் தெரிவித் ததாவது:

இந்த மாதம் 15ம் திகதி

(4-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் கடும் யுத்தம்

[அம்பாறை]

அம்மாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கடந்த நான்கு நாட்களாகக் கடும் யுத்தம் நடைபெறுவதாக ஏஜன்சிச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுடனான மோதலில்

(4-ம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரி, பளையில்.

# நத்தார் தினத்தில் விமானத் தாக்குதல்: நால்வர் படுகாயம்!

## மகாவித்தியாலயம், தபாலகம், வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, பளைப் பகுதிகளில் நத்தார் தினமான நேற்றுக்காலை சிறிலங்கா விமானப்படையின் இரு போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்தனர். மகாவித்தியாலயம், தபாற்கந்தோர் கட்டிடம் உட்பட பல வீடுகள் முற்றுகச் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 9-00 மணியளவில் பளையில் நடைபெற்ற தாக்குதலில் பளை மகாவித்தியாலயம் முற்றுக சேதமடைந்தது. பளைதபாற்கந்தோர் உடபட மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்தன

இதேவேளையில் சாவகச்சேரி இலங்கைவங்கிக்கிளை சந்தியிலும், பெரிய தபாற் கந்தோரடியிலும் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தின.

இத்தாக்குதலினுல் நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்தனர், பெரிய தபாற்கந்தோர் சேதமடைந்துள்ளது

சாவகச்சேரியில் சொர்ண்லிங்கம் நித்தியலட்சுமி, ஜி. குணரத்தினம், இராமலிங்கம், இராசகுலசிங்கம் [வயது 52] ஆகியோர் காயமடைந்தனர்.

சாவகச்சேரியில் மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டு வீச்சில் சில குண்டுகள் வெடிக்காத நிலையில் விடுதலைப் புலிகளினுல் மீட்கப்பட்டன

(வி-163)

## தமிழ் அகதிகள் வெட்டிக் கொலை

(திருமலை)

திருமலையிலுள்ள அகதிமுகாமொன்றில் இருந்த 15 ஆண்களை இராணுவத்தினர் கைது செய்து முகாமுக்குக்கொண்டு சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் திருமலை ஆலங்கேணிப்பகுதியில் மக்களை இராணுவத்தினர் வலுக்கட்டாயமாக அகதிகள் முகா

(4-ம் பக்கம் பார்க்க)

## 'யுத்தத்தால் பெரும் அபாயம்'

(லண்டன்)

''வளைகுடாவில் யுத்தம்

(4-ம் பக்கம் பார்க்க)

ஈழப் போராளிகள் நடமாட்டம்

## தமிழக அரசு அதிருப்தி ஏற்படாமல் நடக்கவேண்டும்

- பிரதமர்

[சென்னை]

''ஈழத்தமிழ்ப் போராளிகள் நடமாட்டம் குறித்துத் தமிழக அரசு தவருன அணுகுமுறையை கையாளுகிறது என்று பலரும் குற்றம்சாட்டியிருப்பதைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு

(4ம் பக்கம் பார்க்க)

### பெற்ற மகனை போருக்கு அனுப்பிய வீரத் தாய்

(நாவற்குழி)

தான் பெற்று வளர்த்த 16 வயது மகனை போராட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்காக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தார் ஒரு வீரத்தாய்.

[4-ம் பக்கம் பார்க்க]

ஊர்காவற்றுறை முகாமிலிருந்து மாலை முதல் அதிகாலைவரை

## ஷெல் தாக்குதல்

[வேலணை]

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர், கடந்த சில தினங்களாக மாலையிலிருந்து அதிகாலை வரை ஆட்டிலறி ஷெல்களைக் குடிமனைகளை நோக்கி ஏவிவருகின்றனர். இதனுல் பல வீடுகள் சேதத்துக்குள்ளாகின்றன.

குறிப்பாக இரவு நேரங்களிலேயே ஷெல்களை இராணுவத்தினர் ஏவிவருவதைத்

(4ம் பக்கம் பார்க்க)

## விமான நிலையத்திற்குள் செல்ல காங்கிரஸ் தொண்டர்களுக்கு தடை

(சென்னை)

இந்தியப் பிரதமர் திரு.சந்திரசேகரின் தமிழக விஜயத்தின்போது, தமிழக இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலர்

(4ம் பக்கம் பார்க்க)

## சினைப்பர் தாக்குதல்; ஒருவர் காயமுற்றுர்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு குறிஞ்சாத்தீவில் நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தின் சினைப்பர் துப்பாக்கிச் சூட்டினுல் சங்கத்தானையைச் சேர்ந்த என். இராஜேந்திரம் (வயது 37) கையில் காயம் ஏற்பட்டு, யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(158)

## நஷ்டஈடு படிவத்துக்கு பெரும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் ஊனமுற்றவர்களுக்கும் இறந்தவர்களுக்குமான நஷ்டஈடு சம்பந்தமான விண்ணப்பப் படிவங்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பெரும் ஏமாற்றத்துடன் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கும் யாழ். செயலகத்திற்கும் விண்ணப்ப படிவங்கள் பெறுவது சம்பந்தமாக அலைந்து திரிகிருர்கள்.

(153)

பிரிட்டனிலுள்ள

## 700 ஈழத்தமிழரின் விண்ணப்பம் குறித்து எவ்வித முடிவுமில்லை

[லண்டன்]

பிரிட்டனுக்கு அகதிகளாக சென்றுள்ள சுமார் 700 இலங்கைத் தமிழர்களினது விண்ணப்பங்கள் குறித்து அந்நாட்டு அரசு இதுவரை எதுவித முடிவையும் எடுக்க வில்லை.

பெரும்பாலும் இவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதுவருட, தைப்பொங்கல் வாழ்த்து மடல்களை மொத்த மாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியா பாரிகளுக்கு விசேட கழிவு உண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256, பருத்தித் துறை வீதி, நல்லூர்; "அரண் ஜவுளியகம்" 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி-4158)

### FUDO-TYPEWRITERS

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும், சிறந்தமுறையில் திருத்தவும் FUDO 39/17, மின்சார நிலையவீதி 3 - ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணக்கிளை, பிரதான வீதி, மானிப்பாய்.
சி-4196

### சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு, ரோனியோ வேலைகள், தமிழ், ஆங்கில தட்டச்சு பயிற்சி வகுப்புக்கள். தமிழ், ஆங்கில, சிங்கள மொழி பெயர்ப்பு. வாசகப் பிரியர்களுக்கு வாடகைப் புத்தகங்கள். அழகுக்கு உயிரூட்டும் தலைச்சோடனை. நீதினி - Q "கபிரியேல் பில்டிங்" பஸ் நிலையம் முன்பாக சுன்னாகம்.
(எ-937)


## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள் 25 பேர் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டார்கள். (153)

## வானில் வெடித்த ஷெல்

[யாழ்ப்பாணம்]

கடந்த சனி இரவு பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் ஒன்று வானத்தில் வெடித்துச் சிதறியது.

புங்கங்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகில் நிலத்தில் விழும் முன்பே வானில் வெடித்து சிதறியது. எனினும் எதுவித சேதமும் ஏற்படவில்லை. [123]

## பரீட்சைக்கு தோற்ற வேண்டும்

(கொழும்பு)

பட்டதாரி மாணவர்களுக்கு நியமனம் வழங்கும் போது அவர்களுக்கு எழுத்துப்பரீட்சையும் நேர்முகப் பரீட்சையும் இனிநடத்தப்படுமென கல்வி உயர் கல்வி அமைச்சர் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

இதுவரையும் பட்டதாரி நியமனங்கள் வழங்கப்படும் போது நேர்முகப் பரீட்சை மட்டுமே நடாததப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

## துறைமுகங்கள் புனரமைக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய துறைமுகங்கள் வெகு விரைவில் புனரமைக்கப்படவுள்ளன.

பருத்தித்துறை துறைமுகம் புனரமைப்பு சம்பந்தமாக துறைமுக அதிகார சபைக்கு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (153)

## ரயில் சேவைகள்

[யாழ்ப்பாணம்]

கொழும்புக்கான ரயில் சேவை மறு அறிவித்தல்வரை மதவாச்சியில் இருந்து நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்புக்கான ரயில் சேவை வாழைச்சேனை வரையும், திருமலைக்கான சேவை கல்லோயா வரையும் நடைபெற்றுவருகின்றன. [எஸ்]

## கடைகள் திறக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்பெரியகடைப் பகுதிகளில் சேதமடைந்த பல கடைகள் திருத்தப்பட்டு இவ்வாரம் மீண்டும் திறக்கப்படவுள்ளன.

முழுமையாக கட்டிடம் சேதமடைந்த கடைகள் தவிர்ந்த சகலகடைகளும் படிப்படியாக திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றுவருகின்றது. (எஸ்)

## என்ன சங்கதி?

நேற்று பெரியகடை பக்கம் போனேன். கடைகளில் நல்லெண்ணை போத்தல்கள் காணப்பட்டன. தேங்காய் எண்ணையைக் காணமுடியவில்லை. எல்லாக் கடைகளிலும் இதே நிலைதான்.

கடந்த மாதம் சாவகச்சேரி சந்தையில் நல்லெண்ணைக்குள் தேங்காய் எண்ணை கலப்படம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டது சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் கலப்படம் செய்யப்பட்ட 100 நல்லெண்ணைப் போத்தல்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

ஆனல் இனிமேல் பயப்படத் தேவையில்லை. அப்படியொன்றும் நடக்காது. காரணம் தேங்காய் எண்ணையின் விலை நல்லெண்ணை விலையிலும் பார்க்க வேகமாக உயர்ந்துவருகிறது. அதனல் சுத்தமான நல்லெண்ணை பெறமுடியும்.

அதுமட்டுமல்ல தரமான நல்லெண்ணை தயாரிக்க வேண்டும் என்று நல்லெண்ணை உற்பத்தியாளர்களும் முடிவு எடுத்திருக்கிறார்கள்.

ஆனல் ஒன்றுமட்டும் சொல்லிவைக்க விரும்புகின்றேன். யாராவது தேங்காய் எண்ணைக்குள் நல்லெண்ணையை கலப்படம் செய்யக்கூடும் எச்சரிக்கையாக இருங்கள்!

'ஊரோடி'

## இரத்த தானம் வழங்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கிக்கு நாளாந்தம் பதினைந்து பேர் வரை இரத்த தானம் செய்தால் இரத்த வங்கியை குறைவில்லாமல் நடத்தலாம் என்று இரத்த வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். யாழ். இரத்தவங்கிக்கு தேவையான ஆய்வுகளுக்குரிய மருந்துவகைகள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. இவைகளைக்கொண்டு ஒரு மாதத்திற்குரிய வேலைகளை செய்யலாம் என்றார். [153]

## உள்ளூராட்சி மன்றங்களின் இறைச்சிக் கடைகள், சந்தைகள் குத்தகைக்கு விடுதல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களின் இறைச்சிக் கடைகள் சந்தைகள் போன்றவற்றை 1991-ம் ஆண்டில் குத்தகைக்குக் கொடுத்தல் சம்பந்தமான கேள்விப் பத்திரங்கள் 28-12-90ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விரும்பும் சகலரும் கேள்விப் பத்திரங்களைச் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## சலுகை விலையில் பொருள்களை வழங்கவும்

[மாங்குளம்)

பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு சலுகை விலையில் அப்பியாசக் கொப்பிகள்சப்பாத்து காலுறைகள, உடைகள் மற்றும் அவசியப் பொருட்களை வழங்கவேண்டும். இல்லையேல் இலவசக் கல்வியின் பயனை இந்நாட்டுப் பிள்ளைகள் அனுபவிக்க முடியாமல் போகும். அப்போது போராட்டம் வெடிக்கும் பங்களாதேஷின் எர்ஷாட் வெளியேறியதுபோல் இந்த அரசும் வெளியேற நேரிடும

இவ்வாறு திரு. வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றத்தில் நடைபெற்றகல்வி உயர்கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீது உரையாற்றுகையில் தெரிவித்தார்; அவர் மேலும் பேசுகையில்,

ஏழைகளின் வறுமை எமக்குத் தெரியாது. இந்தியாவில் எல்லோரும் அம்பாஸிடர் காரில் போகிறார்கள். இங்கு வேறுபாடு காணப்படுகிறது. பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு நிவாரண விலையில் சப்பாத்து ஆடைகள் போன்றவற்றை வழங்காவிடில் பெரும் பிரச்சனை உருவாகும் என்றார் (150)

## ஓய்வூதியருக்கு வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் தமது ஓய்வூதியத்தை வைப்பிலிட்டவர்களில் இதுவரை பணம் எடுக்கத் தவறியோர் முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

## அம்பாறையில் வெள்ளப்பெருக்கு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் இப்பகுதியிலுள்ள மக்கள் வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்

இங்குள்ள வீதிகளில் வெள்ளம்நிரம்பி வழிவதால் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## உ. அ. அதிபர் அலுவலகம் மூலம் படிவங்கள் பெறவும்

(மானிப்பாய்)

வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் வழங்கப்படும் நிவாரணப்படிவங்கள் இனிமேல் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள்மூலம் வழங்கப்படவுள்ளது.

மஞ்சள், வெள்ளை நிறங்களையுடைய இப்படிவங்கள் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவிலேயே இதுவரையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.

தற்போது இப்படிவங்கள்புனர்வாழ்வுப் பிரிவில்முடிவடைந்துவிட்டதாகவும்அவை கொழும்பிலிருந்து வந்ததும் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படுமென்றும் பாதிக்கப்பட்டவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி தமது பகுதிஉதவி அரசாங்க அதிகாரிடம் இதனைப் பெற்றுக்கொள்ளலாமென்றும் புனர்வாழ்வுப்பகுதி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (71)

## ஆசிரியர் கூட்டம்

(உடுவில்)

மருதனுமடம் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்குமான கூட்டம் ஒன்று 27ம் திகதி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (100)


## இலகுவான கடன் வசதிகள் பெறுவதற்கு

(I) வாடகைக் கொள்வனவிற்கு கடன்
(II) வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன்

**MERCHANT FINANCE LIMITED**

**மேர்ச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்,**

555, நாவலர் வீதி,
(கைலாசபிள்ளையார் கோவில் மேற்கு வீதியடி),
த. பெ. இல. 93, யாழ்ப்பாணம்.

கூட்டிணைக்கப்பட்ட திகதி 02-05-1979
Registered with the Central Bank of Sri Lanka.
under the Control of Finance Companies Act. No; 27 of 1979)
Licence No. 34 -1 of 27-11-80.

இயக்குநர் சபை:
A சோமசுந்தரம்பிள்ளை, B. A., F. C. A. தலைவர், முகாமைத்துவ இயக்குநர்
S. மகேந்திரா, B. Sc. (Cey.) பிரதி முகாமைத்துவ இயக்குநர்
K. நடராசா B. Sc. (Econ.), Bar-at-Law, Attorney-at-law
C. மகேசன், Attorney-at-law
S. சிவஞானம், Retd. S. L. A. S.
செல்வி யோ. முருகேசு
பேராசிரியர் செ. இராசரத்தினம் - பொருளியல்துறை, யாழ். வளாகம்
(A 948)

## வெலிக்கடை பலிக்களம்!

அதர்மம் தலைவிரித்தாடும் எமது நாட்டில் சிறைக்கூடம் விற்பனைக்கு விடப்படுவதும், நவீன சிறைச்சாலை அமைக்க அரசு திட்டம் போடுவதும் விந்தையான விடயம் அல்ல!

நாட்டில் செல்வம் செழிப்பு மேலோங்கினால் திறைசேரி நிறைந்து வழியும் பஞ்சம், படுகொலைகள் மிஞ்சினால் சிறைச்சாலைகள் தானே நிறைந்து வழியும்!

அந்தவகையில் எட்டுச் கோடி ரூபாவுக்கு 'பலிக்களமாம' வெலிக்கடைச் சிறையை விற்று நாவலவில் நவீன சிறைச்சாலை அமைக்க அரசும் அதன் நீதி அமைச்சும் திட்டம் போடுவது மிகவும் ஆழ்ந்து அணுகவேண்டிய அவசியபிரச்சனை தானே!

வெலிக்கடைச் சிறைக்கும், விடுதலை வேண்டி நின்ற தமிழீழ வீரபுருஷர்களின் சித்திரவதைக்கும் நிறையவே தொடர்பு உண்டு.

1983-ம் ஆண்டு ஜூலை 26-ல் தமிழீழம் வேண்டி நின்ற போராளிகளின் கண்களைத் தோண்டி சித்திரவதைசெய்து களபலி எடுத்தது வெலிக்கடை சிறைச்சாலை என்பதை தமிழினம் மறப்பதற்கில்லை!

என்ன செய்வது எமது நாட்டில், சிறைக்குள் இருக்க வேண்டியவர்கள் அதிகார ஆணவச்சிறகு முளைத்துப் பறக்கிறார்கள். விடுதலைவேண்டி நிற்கும் வீரர்கள் சிறைக்குள் அடைக்கப்பட்டு தொடர்ந்து சித்திரவதைக்கு உள்ளாக்கப் படுகிறார்கள்!

முற்றுமுழுதாக நாடே சிறைக் கூடமாகி விட்டதை உய்த்துணர்ந்த புத்திஜீவிகளும் நாட்டைவிட் டோடுகின்றனர். வடக்கு-கிழக்கையே வெலிக்கடை சிறையாக்கியுள்ள அரசபடைகள் தமிழ் மக்களை வெட்டியும்சுட்டும்கொல்கிறதே; எஞ்சியோர் பஞ்சத்திலும்தவிப்பு! அனைத்திலும் தப்பிப் பிழைத்தோர்வாழ்க்கைச்செலவு உயர்வு என்ற தூக்குக் கயிற்றில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர்.

நாடே நமக்குச்சிறைக் கூடமாகிவிட்ட இத்தகைய அவல நிலைக்கு மாற்றுவழிகாண, மனமில்லாத அரசும் – அதன் நீதியமைச்சும், வெலிக்கடைச் சிறையை விற்பனைக்கு விட்டால் என்ன? நாவலவில் நவீன சிறை அமைத்தால் என்ன?

சிறைப்பறவைகளாக்கப்பட்ட எமக்கு என்று தான் விடுதலையோ வீர சுதந்திரமோ? யார்தான் அறிவார்?

— மயூரன்.

# இன்றைய போராட்டத்தில் பெண்களின் பங்கு அதிகம்

## தேவர் உரை

(கொக்குவில்)

அரசின் அடக்கு முறையையும் இன அழிப்பையும் எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த போராட்டம் இன்று வெற்றிப்பாதையில் செல்கிறது. எம்மக்களின் அமோக ஒத்துழைப்பு எமக்குப் பெரும் உத்வேகத்தைக் கொடுத்துள்ளது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. தேவர் எம். ஜி. ஆரின் 3-வது நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரை யாற்றுகையில் தெரிவித்தார.

அவர் மேலும் பேசுகையில்:- 1956-ம் ஆண்டு தனிச் சிங்களம் சட்டமாக்கப்பட்ட போது தந்தை செல்வா கூறினார் தமிழனுக்கு இது ஒரு அடி என. 1958-இல் இனக் கலவரம். 1961-ம் ஆண்டு கச்சேரி சத்தியாகிரகம் முறியடிப்பு, 1970 ம் ஆண்டு மாணவர்களுக்கான தரப்படுத்தல். பின்பு 1977-ம் ஆண்டு இனக் கலவரம், 1981-ம் ஆண்டு ஆசியாவில் சிறந்த நூலகமாக விளங்கிய யாழ் நூலகத்திற்கு சிங்கள பொலிஸ் காடையர் தீயிட்டமை, 1983-ம் ஆண்டு மீண்டும் ஓர் பாரிய இனக்கலவரம் 1987-ம் ஆண்டு வடமராட்சி "லிபரேசன் ஒப்பிரேசன்."

இப்படியே தொடர்ந்து எம் இனத்தை, எம் மண்ணை நசுக்கி, ஒடுக்கி அழித்துவந்த தமையை 16 வயதிலிருந்தே சிந்தித்து வந்த எம் தலைவன் திரு வே. பிரபாகரன் தலைமையில் இன்று 1990 ஆம் ஆண்டு பாரியபோர் 7 மாதமாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்த யுத்தத்தில் யாழ். கோட்டை, கொக்காவில், மாங்குளம் போன்ற பல முகாம்களையும், ஆயுதங்களையும் கைப்பற்றி வெற்றிவாகை சூடிவரும் விடுதலைப் புலிகளுடன் திரண்டு இணையுங்கள்.

இணைந்தவர்கள் எல்லோரும் ஆயுதம்தான் ஏந்த வேண்டும் என்ற நிர்ப்பந்தமல்ல காயப்பட்ட போராளிகளைப் பராமரித்தல் போன்ற இன்னோரன்ன உதவிகளைச் செய்ய முடியும்.

இக்கூட்டத்தில் கலந்திருக்கும் பெண்களைப் பார்க்கும் போது எமது இயக்கத்தில் பெண் போராளிகள்தான் கூடவாக இருக்கும் என நம்புகின்றேன்.

தொடர்ந்தும் இன அழிப்பிற்கேதான் அரசு முயற்சிக்கின்றது. விடுதலைப் போராளிகளுடன்தான் யுத்தம் என பறைசாற்றி அப்பாவி மக்களை கொல்லுகின்றது. இன்று பால் மணம் மாறாத பிஞ்சுகள் பிரபாகரன் வளர்த்த குஞ்சுகள் என்றார்.

கொக்குவில் தாவடி காளி அம்மன் சனசமூக நிலைய முன்றலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெகுஜன கூட்டு அமைப்பினர் நடாத்திய எம் ஜி. ஆரின் 3-வது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் தலைவர் திரு: பொன். மதிமுகராசாவின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் மூத்தஉறுப்பினர் பேபி சுப்பிரமணியம் முன்னாள் தமிழக முதலவர் எம். ஜி. ஆர். அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செய்தார். மற்றும் பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர் இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(135)

## மனம் ஒன்றுகில் துயரங்கள் போகும்!

ஆசைகள் ஆயிரம் தோன்றும் - அதை
அடக்கியே வென்றிடல் வேண்டும்
நீதியின் குரல்சிறைப் பட்டால்
நேர்மை நியாயம் புதைகுழி மூழ்கும்
சாதி உயர்வு தாழ் வென்றே
யார் வகுத் தாரிந்த நீதி?
ஓரினம் ஓர்குலம் என்றே
பேரிறை எம்மைப் படைத்தான்

வள்ளுவன் காந்திஜி புத்தன் - யேசு
வார்த்தையின் அர்த்தமும் சொல்லி
பிள்ளையைக் கிள்ளியே தொட்டில்
ஆட்டிடும் ஆட்சியின் மாட்சி
தொல்லைகள் நீங்கிநல் வாழ்வு
தொடர்ந்திட "இங்குள யாவும்"
நல்ல குடைநிழல் சேரும்
நாளை இறைமைப்பூ மணம் வீசும்

அழகொளிர் முத்து எடுக்க
ஆழ்கடல் ஊர்ந்திட வேண்டும் - முட்டை
அமுதுடன் சேர்ந்திடக் கோது
அதுதகர்த் தெறிக்க வேண்டும்
தேனீக்கள் கொட்டுமென் றிட்டால்
தேன் சுரம் கிட்டிடா - பயணம்
ஓர்குதிரை மேலே ஆகும - மனம்
ஒன்றுகில் துயரங்கள் போகும்

நெடுந்தீவு லக்ஸ்மன்.

## இராசி பலன்

26-12-1990
புதன்கிழமை

நவமி பி. ப. 2.04 வரை. ரேவதி பி. ப. 5.07 வரை. மரணயோகம். கரி நாள். இராகுகாலம் பகல் 12-27 முதல் 1 57 வரை. நல்ல நேரம் மாலை 4.57 முதல் 6.27 வரை.

மேடம்- எடுத்த காரியம் வெற்றி. புதுப்பொருள் சேர்க்கை, உறவினர்பாராட்டு பணவரவு, தொழில் சிறப்பு.

இடபம்-மறைமுக எதிர்ப்பு, வாழ்க்கைப் போராட்டம், அதிகாரிகள் கினம், மன மகிழ்ச்சி.

மிதுனம்-தொழில் லாபம் இனசன நட்பு, விருந்துபசாரம், குடும்ப மகிழ்ச்சி, புகழ்.

கடகம்-தொழில் தகராறு. கடன் வசூல், பகைவர் உபத்திரவம். புத்திரர் மனஸ்தாபம்.

சிங்கம்-தெய்வ சிந்தனை, பயணங்களால் அலைச்சல், அந்நியர் தொல்லை, மனக் குழப்பம்.

கன்னி-கடும்போக்கு. அவமதிப்பு, தடுமாற்றம், பயந்த சுபாவம், அகாலபோஜனம்.

துலாம்-மனநிறைவான சம்பவம், புதிய உறவு, தொழில் பாராட்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி.

விருச்சிகம்- அந்நிய வாசம், காரியத்தடை, பயனற்ற செயல், புத்திரர் செலவு, குடும்பப் பிரிவு.

தனுசு-ஏமாற்றம். போட்டிகளில் தோல்வி, குடும்பச் சச்சரவு, தொழில் கஷ்டம்.

மகரம்-நோய் உபத்திரவம், வைத்தியச் செலவு, கடன் சுமை, குடும்பக் கவலை, அலைச்சல்.

கும்பம்- குடும்பத்தில் சுப காரியம், பணவரவு, காரிய சித்தி, தொழில் லாபம், ஆலய தரிசனம்.

மீனம் - குடும்பக் கஷ்டம் தொழில் நஸ்டம், உறவினர் பகை, தூரதிதுச்செய்தி, அகம் பாவம்.

ஜோஸ்யர்.

## குறையை நிவர்த்திக்க தமிழ் அதிகாரி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் கிளிநொச்சிப் பிரதேசத்தில் நிலவும் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் நோக்குடன் யாழ் பிராந்திய சுகாதரப் பணிப்பாளரினால் இளைப்பாறிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் 16 பேருக்கு மீண்டும் ஒருவருட சேவை நீடிப்பு வழங்கும் கோரிக்கையை கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சுக்கு அனுப்பியிருந்தார்.

இக்கோரிக்கையை சுகாதார அமைச்சிலுள்ள ஒரு உயர் தமிழ் அதிகாரி நிராகரித்துள்ளதாக தெரியவருகிறது.

[153]

## இடமாற்ற உத்தரவு புதிய சுற்றறிக்கை

(மானிப்பாய்)

ஒரு மாவட்டத்தில் 8 வருடங்களுக்கு மேலாக பணிபுரியும் கிராமிய அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் அடுத்த வருடம் முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்

இதற்கான முன்னறிவித்தல் வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் வடக்கு-கிழக்கு மாவட்டங்களின் சகல அரசாங்க அதிபர்களுக்கும் கடித மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

இக்கடிதத்தில் ஒரு மாவட்டத்தில் 8 வருடங்களுக்கு மேலாக பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தற்போது சேவைபுரியும் மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்துக்கோ அல்லது ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்கோ மாற்றப் படுவார்கள்.

ஒருவர் தமது சொந்தக் கிராமத்திலுள்ள பிரிவில் 5 வருடங்களுக்கு மேலாகப்பணி புரிந்திருந்தால் அவர் மாவட்டத்திற்குள் இன்னோர் பிரிவுக்கோ அல்லது வெளிமாவட்டத்துக்கோ இடமாற்றம் செய்யப்படுவர்.

இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (71)

## பலதும் பத்தும்

### திருமணம் நடக்கும் நாள்!

திருமணம் நடக்கும் நாள் அதிர்ஷ்ட நாளாக இருக்க வேண்டும்: ஞாயிற்றுக் கிழமைத் திருமணம் கடமைகட்கும் தியாகங்கட்கும் உகந்தது. திங்கட்கிழமை திருமணம் தேகசுகத்தின் செழுமைக்கு ஏற்றது: செவ்வாய்க்கிழமைத் திருமணம் திரளான செல்வத்திற்கு ஏற்றது. புதன்கிழமைத் திருமணம்எல்லாவகையான நன்மைகளுக்கும் உகந்தது: வியாழக்கிழமை திருமணம் நஷ்டங்களுக்கும் தொல்லைகளுக்கும் வழிவகுக்கும்; வெள்ளிக்கிழமை திருமணம் புலம்பல்களுக்கு வழிவகுக்கும். சனிக்கிழமைத் திருமணம் அதிஸ்டத்தின் வாடையேஇல்லாத அவலத்திற்கு இட்டுச்செல்லுமென "You and your Numbers" என்னும் நூல் தெரிவிக்கின்றது.

ஞானி

தொலைக்கல்வி பயிற்சி—

## தெரிவான ஆசிரிய மாணவருக்கு

# 5 நாள் தொடர்புறுவகுப்புகள்

(நாவற்குழி)

தொலைக்கல்விப் பயிற்சி மூலம் பயிற்சிபெற தெரிவான 90-92 கல்வியாண்டிற்கான ஆசிரிய மாணவர்களுக்கான ஐந்துநாள் தொடர்புறு வகுப்புகள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இம்மாதம் 29ம் திகதிவரை நடைபெறும்'

இதுவரை தெரிவான ஆசிரியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யாதிருந்தால் 29ந் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர்களை யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் உள்ள தொலைக்கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து பயிற்சியிலும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட தொலைக்கல்விக்பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு ம. செ. அலெக்சாந்தர் தெரிவித்தார்.

இதேவேளையில் 89-91 கல்வி ஆண்டுக்கான ஆசிரிய மாணவர்களும் 29ம் திகதி வரை நடைபெறும் தொடர்புறு வகுப்புகளில் கலந்துகொண்டு தங்களுக்குரிய மொடியூல்ஸ் (பாடநூல்)களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார். (107)

ஓய்வூதியம்—

## நவம்பர், டிசம்பர் சம்பள உயர்வுடன் வழங்கப்படும்

[மாங்குளம்]

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நவம்பர் மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வு ஓய்வூதியர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

ஓய்வூதியர்களுக்கு நவம்பர், டிசம்பர் மாதம் அதிகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பு ஜனவரி மாதத்தில் சேர்த்து வழங்கப்படுமென ஓய்வூதியப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (150]

## மீண்டும்' தளிர்'

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் வெளியீடான 'தளிர்' மீண்டும் வெளிவந்துள்ளது. 154)

## 2ம் கட்ட நிவாரணம் கிடைக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இதுவரை சகலருக்குமான விசேஷ 2ம் வார இலவச உலர் உணவு விநியோகம் இதுவரை நடைபெறவில்லை. (153)

கப்பலிலிருந்து—

# உணவுப் பொருள் இறக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தில் கடல் கொந்தளிப்பும் சீரற்ற காலநிலையும் நிலவிய போதிலும் வெகுசிரமத்தின் மத்தியில் லங்காசிறி கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கும் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் எரிபொருட்களானடீசல், மண்ணெண்ணெய் யாவும் இறக்கப்பட்டுள்ளது.

நேற்று கப்பலிலிருந்து உணவுப்பொருட்கள் இறக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உணவுப் பொருட்களை ப. நோ. கூ. சங்க களஞ்சியங்களுக்கு கொண்டு வருவதற்கு பல லொறிகள் நேற்று பருத்தித்துறைக்குச் சென்றன. (153

## பிரிட்டனிலுள்ள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டனின் புதிய குடிவரவு குடியகல்வு சட்டத்திற்கமையவே இந்நடடிக்கை அமையுமென எதிர்பார்க்கப்படுதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ஒருநாள் சம்பளம் வழங்கமுடிவு

(வேலணை]

கிழக்குமாகாணத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வருகை தந்திருக்கும் மக்களுக்கு உதவும் பொருட்டு வேலணைப் பிரதேச சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தங்களினது ஒருநாள் சம்பளத்தை வழங்கவுள்ளனர்.

## இன்று நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக முன்னாள் மாணவரவைத் தலைவரும் வீரமரணமடைந்த விடுதலைப்புலிகள் இயக்க போராளியுமான லெப்டினன் காண்டீபனின் (சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராஜா குமுளமுனை முல்லைத்தீவு) ஆறும் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று 26ந் திகதி காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவிருக்கிறது. (153)

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

அண்மையில் முதலாம், இரண்டாம் தர அதிபர் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கம் நடாத்தும் இக்கருத்தரங்கு 27-ம், 28-ம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்படும்.

27-ம் திகதிய கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு முதலாம் தர அதிபர் தரத்திற்கு பதவியுயர்வு பெற்றவர்களையும், 28-ம் திகதிய கருத்தரங்கில் இரண்டாம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்றவர்களையும் கலந்துகொள்ளுமாறு கல்வித் திணைக்களமும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து கோரியுள்ளன.

## பெற்ற மகனை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பச்சிலைப்பள்ளி அரசர்கேணியில் வசிக்கும் கதிராத்தை வல்லிபுரம் என்பவரே இவ்வாறு தன்மகனை பனை வட்டப் பொறும்பாளர் திரு. கந்தனிடம் ஒப்படைத்தவராகும்.

வல்லிபுரம் என்பவர் புலிகளுக்குச் சாப்பாடு கொடுத்த குற்றத்திற்காக தமிழ்க்குழு ஒன்றினால் கொலைசெய்யப்பட்டவராவார். (107)

## பொருட்கள், நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட தென் தமிழ்ஈழ மக்களுக்கு உதவும் பொருட்டு உடுபுடவைகள், பணம் மற்றும் இதர பொருட்கள் யாவும் நீர்வேலிப் பகுதியில் சேகரிக்கப்பட்டன.

நீர்வேலி சிவசங்கர பண்டிதர் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இளைஞர்களே மேற்படி பொருட்கள் சேகரிப்பதில் ஈடுபட்டனர். (க)

## அமைதியான கிறிஸ்மஸ் விழா

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் கிறிஸ்மஸ் விழா அமைதியாகக் கொண்டாடப்பட்டது.

நேற்றுக் காலை, மக்கள் தேவாலயங்களுக்கு வழிபாட்டுக்குச் செல்லும் வேளையில் யாழ். நகர்ப் பகுதியில் ஒரு அவ்ரோ விமானமும், இரு பொம்மர் விமானங்களும் வானத்தில் வட்டமிட்டதால் மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலவியது. (வி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/160306/81.

# மூவர் உயர் அதிகாரிகள்

[வவுனியா]

ஹொறவப்பொத்தானையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புலிகளின் தாக்குதலில் பலியான 19 சிறிலங்கா இராணுவத்தினரில் மூவர் உயர் அதிகாரிகள் எனத் தற்போது தெரியவந்துள்ளது. (வி)

## அம்பாறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்காப் படையினருக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அச்செய்தி மேலும் தெரிவித்தது.

மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், திருமலை ஆகிய இடங்களில் மோதல்கள் தொடர்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

கிரிக்கெட்:

## இந்தியா வெற்றி

(புதுடில்லி)

சண்டிகாரில் நேற்று ஆரம்பமான ஆசியக் கிண்ணத்துக்கான ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில், இந்தியா பங்களாதேஷை 9 விக்கட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்படி போட்டியில் முதலில் துடுப்பு எடுத்தாடிய பங்களாதேஷ் கோஷ்டி 50 ஓவர்களில் ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு 170 ஓட்டங்களைப் பெற்றது. பாரூக் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 57 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் பின் துடுப்பெடுத்தாடிய இந்தியா, 37 ஓவர்களில் ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு 171 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பத்தில் துடுப்படி வீரர் சித்து ஆட்டம் இழக்காமல் 100 ஓட்டங்களைப் பெற்றார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்தியா இலங்கையை எதிர்த்து விளையாடும். (வி)

## முஸ்லிம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நாங்கள் குருநகரிலிருந்து எட்டுப் பேர் ஒரு படகில் மீன்பிடிக்கச் சென்றோம். மன்னார் கடலில் வைத்து தலைமன்னார் கடற்படையினர் எங்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டுசென்றார்கள். அங்கு ஹெலிகொப்டரிலிருந்து ஊன்றுகோலுடன் இறங்கி வந்த இராணுவத் தளபதி ஹெக்டர் கொப்பேகடுவ எங்களைப் பார்வையிட்டு தமிழில் கதைத்தார்.

எங்களில் ஒருவருக்கு சிங்களம் தெரிந்தபடியால் எங்களின் சோகக் கதையைச் சொன்னோம். அவர் எங்களைக் கொண்டுபோய் காரைநகர் கடற்படைமுகாமில் விடுமாறு கடற்படை படகோட்டிகளுக்குச் சொன்னார்.

இரண்டு மூன்று தினங்களின் பின்பு நாங்கள் காரைநகர் கடற்படைமுகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டோம். காரைநகர் முகாமில் நாங்கள் முஸ்லிம் கடற்படையினரால் தாக்கப்பட்டோம். அவர்கள் சப்பாத்துக்காலால் அடித்தார்கள். நாங்கள் எப்படியும் விடுவிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையில் அவர்கள் செய்த சித்திரவதைகளை தாங்கிக் கொண்டோம். எங்களில் சிலருக்கு இன்னமும் காயங்கள் மாறவில்லை- இரண்டு தினங்களின் பின்பு நாங்கள் நயினாதீவுக்கு கொண்டுசெல்லப்பட்டோம். கடந்த 23ந் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு தீவுப்பகுதியால் அராலித்துறை வந்து குருநகர் வந்து சேர்ந்தோம்.

## ஹெலி தாக்குதல்

[வேலணை]

வேலணை மண்கும்பான், சாட்டி பகுதிகளில் ஹெலிகொப்டர் ஒன்று சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டது

இதனால் பல வீடுகளின் ஓடுகள் நொருங்கி சேதமடைந்துள்ளன.

ஹெலிகொப்டர் வருவதைக் கண்ட மக்கள் பாதுகாப்புத்தேடி வெளியில் ஓடி மறைவிடங்களில் தஞ்சமடைந்ததால் எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

## யுத்தத்தால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்று ஏற்படுமானால் உலகம் பெரும் அபாயத்தை எதிர்நோக்கவேண்டிவரும்" என்று வத்திக்கான் தேவாலயத்தில் பரிசுத்த பாப்பரசர் விடுத்த நத்தார் தினச்செய்தியில் தெரிவித்துள்ளார். (க)

## தமிழ் அகதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மில் தங்கவைத்து பின்னர் அவர்களை கைதுசெய்து பிளனட்பொயின் இராணுவமுகாமுக்குக் கொண்டுசென்று சுட்டும், வெட்டியும் கொலை செய்துள்ளனர்.

இதேபோல் தற்போது கைது செய்யப்பட்டவர்களுக்கும் ஏற்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது. (வி)

## விமான

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திரு. வாழப்பாடி ராமமூர்த்தியையும், காங்கிரஸ் தொண்டர்களையும் விமானநிலையத்துக்குச் செல்லக் காவல்துறையினர் அநுமதிக்கவில்லை.

இச்செயலை அவதானித்த பிரதமர் திரு. சந்திரசேகர், தமது காவல்துறைக் கண்காணிப்புகளையும் மீறி, தாமே அவ்விடம் நேரில் சென்று, வாழப்பாடி ராமமூர்த்தி மற்றும் தொண்டர்களின் மாலை மரிமாதையை ஏற்றுக்கொண்டார். (க)

## ஈழப் போராளிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு அதிருப்தி ஏற்படாமல் நடந்துகொள்ளவேண்டும்."

இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் நேற்று மேற்கொண்ட தமிழக விஜயத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பாதிக்கப்பட்ட அல்லது விமர்சனத்துக்குள்ளாக்கப்படும் மாநில அரசுகள்மீது கவனம் செலுத்தவேண்டியது மத்திய அரசின் பொறுப்பு என்றார். (க)

## ஊர்காவற்றுறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து பயத்தினால் மக்கள் பகலில் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு, மாலையில் வீடுகளில் இல்லாமல் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று தங்கிவிட்டு, மறுநாள் காலையில் தத்தம் வீடுகளுக்குத் திரும்பி அன்றாடக் கடமைகளை முடித்துக்கொண்டு மாலையானதும் மீண்டும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதைக் காணமுடிகிறது.